**செய்தி வெளியீடு எண்: 112** **நாள்: 21.02.2013**

## <u>செய்தி வெளியீடு</u>

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 20.2.2013 அன்று தலைமைச் செயலகத்தில், விழுப்புரம் மாவட்டத்தில் 80 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையத்தை காணொலிக் காட்சி (Video Conferencing) மூலமாக துவக்கி வைத்தார்கள். மேலும், திருவண்ணாமலை மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையங்களையும் துவக்கி வைத்தார்கள்.

கிராமப்புற பொருளாதாரத்தை மேம்படுத்துவதிலும், கிராமப்புற ஏழை விவசாயிகளின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதிலும் கால்நடைகள் முக்கிய பங்கு வகிக்கின்றன. எனவே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் தலைமையிலான அரசு கால்நடை வளர்ப்பிலும், அது தொடர்பான மருத்துவ ஆராய்ச்சி மேம்பாட்டிலும் கவனம் செலுத்துகிறது.

தமிழகத்தில் தற்போது 15 கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையங்கள் மற்றும் 6 உழவர் பயிற்சி மையங்கள் செயல்பட்டு வருகின்றன. கிராமப்புற ஏழை விவசாயிகளின் வாழ்வாதாரத்தை உயர்த்துவதற்கு இம்மையங்கள் மூலம் வழங்கப்படும் நவீன தொழில்நுட்ப பரிமாற்றம் மற்றும் கால்நடை மற்றும் கோழி வளர்ப்பு குறித்த சிறப்புப் பயிற்சிகள் பயனுள்ளதாக இருப்பதோடு, மாவட்ட அரசு நிருவாகங்களுடன் சீரான தொடர்பை ஏற்படுத்தி, மகளிர் சுயஉதவிக் குழுக்களும், விவசாயிகளும் கால்நடை வளர்ப்பில் அரசுத் திட்டங்களின் முழுப்பலனையும் பெற இம்மையங்கள் பெரிதும் துணை புரிகின்றன.

2012–2013ஆம் நிதியாண்டில் தமிழகத்தில் மேலும் மூன்று புதிய கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையங்களை தொடங்கிட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 2 கோடியே 40 லட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்து உத்தரவிட்டார்கள்.

அதன்படி, தலா 80 லட்சம் ரூபாய் வீதம், 2 கோடியே 40 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் விழுப்புரம், திருவண்ணாமலை மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள மூன்று கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 20.2.2013 அன்று துவக்கி வைத்தார்கள்.

புதிதாக தொடங்கப்பட்டுள்ள இந்த மூன்று கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையங்கள், அம்மாவட்டங்களிலுள்ள கிராமப்புற கால்நடை வளர்ப்போரின் வருமானத்தை உயர்த்தும் வகையில் கால்நடை வளர்ப்பில் நவீன தொழில்நுட்பப் பயிற்சிகள் வழங்கவும், விவசாயிகளுக்கு களத்தில் ஏற்படும் பிரச்சனைகளை உடனுக்குடன் அறிந்து அவற்றிற்கான காரணங்களை ஆய்ந்து தீர்வுகளைக் காண பெரிதும் உதவும். மேலும், அந்தந்த மாவட்டங்களில் நிலவும் கிராமப்புற சூழலுக்கேற்ப கறவை மாடு வளர்ப்பு, ஆடு வளர்ப்பு மற்றும் கோழியின உற்பத்தியில் புதிய தொழில்நுட்பங்களை அறிமுகப்படுத்துவதன் மூலம் இத்தகைய கால்நடை இனங்களை வளர்ப்பதன் மூலமான வருவாய் பெருகி கிராமப்புற வாழ்வாதாரம் உயர்வதற்கு வாய்ப்புகள் உருவாகும்.

ஆவின் நிறுவனத்தால் கூடுதலாகக் கொள்முதல் செய்யப்படும் பாலிலிருந்து தயாரிக்கப்பட்ட Milky & Nutty மற்றும் Nutties என்ற இரண்டு வகையான சாக்லெட் விற்பனையினை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 20.2.2013 அன்று தலைமைச் செயலகத்தில் துவக்கி வைத்தார்கள்.

பால் உற்பத்தியாளர்களுக்கு உரிய வருமானம் ஈட்டித் தரவும், நுகர்வோருக்கு தரமான பால் மற்றும் பால் பொருட்கள் கிடைப்பதை உறுதி செய்யவும் மதிப்புக் கூட்டப்பட்ட பால் உபபொருட்களை ஆவின் நிறுவனம் தயாரித்து விற்பனை செய்து வருகிறது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி கடந்த ஆண்டு ஆகஸ்ட் மாதம் மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் மற்றும் ஆவின் அலுவலர்கள் பெல்ஜியம் நாட்டிற்கு சென்று மதிப்புக் கூட்டப்பட்ட பால் பொருட்கள் தயாரிப்பு பற்றி அறிந்து வந்தனர். அதன் தொடர்ச்சியாக ஆவின் நிறுவனம் கூடுதலாக கொள்முதல் செய்யப்படும் பாலிலிருந்து சாக்லெட் தயாரிக்கும் பணிகளை மேற்கொண்டது. ஆவின் நிறுவனத்தால் புதிதாகத் தயாரிக்கப்பட்ட Milky & Nutty மற்றும் Nutties என்ற இரண்டு வகையான சாக்லெட் விற்பனையை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 20.2.2013 அன்று துவக்கி வைத்தார்கள்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர், மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர், தலைமைச் செயலாளர், கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத் துறைச் செயலாளர், பால் உற்பத்தி மற்றும் பால் பண்ணை மேம்பாட்டுத் துறை ஆணையர், தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழக துணை வேந்தர் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * * *

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9.
நாள்: 21.2.2013